







ஓலை 157| ஓசை 280| ஜனவரி 2026

# அகர முதல இலக்கியப் பேரவை




தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

## பொருள்

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது, அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## மோன மென்பது ஞான வரம்பு!

பாவகை : இன்னிசைப் பஃறொடை வெண்பா




தென்றலும் மௌனத்தால் தேடிடும் பூக்களுமே
என்றுமே மௌனத்தை ஏற்குமே கன்றும்
பசுவின் மடியிலே பாலருந்த மௌனம்
கொசுவும் கடத்திடும் மௌனமே கொள்ளுமே!
ஆழ்கடல் மௌனம் அதுகொள்ள நீரினம்
ஆழ்ந்தே உறங்கும் அமைதியாய் பாழ்மனமும்
பாருமே மௌனமாய்ப் பாங்காய் உறங்கும்:
வேருமே மௌனத்தை வேண்டி ஊரும்
தவமிருக்கும்; மௌனத்தைத் தாங்கிடும் யாவும்
உவந்தமெய் ஞானம் உருபெற்று எவ்வுயிரும்
ஊறு விளைக்கா துயிர்வாழும் என்றே
பேறுமே வாய்ப்பதே பீடு!




**இலக்கணக் குறிப்பு:**

நான்கு நான்கு சீர்கள் அடி தோறும் பெற்று வந்த பன்னிரண்டு அடிகள் கொண்ட இன்னிசைப் பஃறொடை வெண்பாதான் மேலே உள்ளது. தனிச்சீரின்றி இரண்டிரண்டு அடிகளுக்கு ஒரெதுகைப் பெற்று, அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று வந்ததாகும். வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் கலந்து வந்து, சீருக்குச் சீர் காய் முன் நேர், நேர் முன் நிரை, நிரை முன் நேர் என்ற வெண்டளையில் செப்பலோசையுடன் வந்ததாகும். ஈற்றடியில் மூன்று சீர்கள் வந்து, ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் வந்து, கு, சு, டு, து, பு, று போன்ற எழுத்துக்களில் ஒன்று பெற்று உகர ஓசையில் முடியும்,

## பாவகை : ஏந்திசைச் செப்பல்

நெற்கதிர்கள் சாய்ந்திருக்க நேரெழும் நீள்பதரும்.
நெற்பரப்பில் புட்களுமே நெப்பமாக கொத்திடுமே
தெற்றெனவே மங்கையரும் தெளிரலுடன் பாடுவரே
கெற்சிதமாய்ச் செய்திடுவார் கெட்டி.



கவிஞர் செ. கலைவாணி

# கீழ்மையை நாளும் கிழி!

பா வகை: இன்னிசைக் குளக வெண்பா

சென்றதை எண்ணியே சீர்மை குலைந்திடா
வென்றிட வேண்டுமே வீறுடன் நில்லடா
துன்ப நிலையினை தூக்கியே வீசடா
நன்மைக்கே போரிடு நாளும்



வாழ்வினில் என்றுமே வல்லமை பெற்றிடு
பாழ்நிலை போக்கிட பண்புடன் நின்றிடு
ஏழ்நிலை இல்லா எழில்நிலை கொண்டிடு
கீழ்மையை நாளும் கிழி

தாழ்ந்தே வளைந்தே தரணியில் நின்றால்
சீழ்மை பிடித்துமே சீரழியும் நாடுமே
ஏழ்மையும் போக்கிட ஏர்போல நின்றே
கீழ்மையை நாளும் கிழி

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

மறியல் போராட்டம் செய்கிறது
குப்பைகளும் பிளாஸ்டிக் கழிவுகளும்
"ஏரி பாசன கால்வாயில்"



கவிஞர் கு. விக்னேஷ்

# நீள் கனவொன்றில்

காக்கைகள்
புறாவாக மாறக்காண்கிறேன்.
சிட்டுக்குருவிகள்
ஆமைகளாய்.
ஊரின் வடக்குக்குளம்
மாறியிருக்கிறது சிறுதொட்டியாய்.

வயோதிகர்கள் வாலிபத்தை
அணிந்துத்திரிகிறார்கள்
தலைச் சாயங்களுடன்.
யாசிப்பவர்கள்
தர்மம் செய்கிறார்கள்.



பகல் வானில் சந்திரனும்
இரவில் சூரியனுமாக வலம் வர
திசைகளை வேறு கோணங்களில்
காட்டுகிறது
திசைமானிகள்.

கருநிழலாய் விழுகிறது
நிலைக்கண்ணாடியில் பிம்பங்கள்.
எதிர்த்திசையில் சுழல்கிறது
கடிகாரங்கள்.
புலிகள் புல்லை உண்ணுகின்றன.

பிரபஞ்சத்தில் பூத்தவையெல்லாம்
அதனதன் சுயத்தையிழந்து
முற்றிலும் மாறுபட்டு
வெவ்வேறு அரிதாரங்களுடன்
எதோ இருந்து கொண்டிருக்கிறது
எனது நீள் கனவொன்றில்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# மலர்ந்தும் மலராத பூவாய்

மலர்ந்தும் மலராத பூவாய் நானும்
எத்தனை ஆசைகள்
என் மனதில்!
சுத்தமாய் இல்லை சமூகம்
சத்தமாய் அழமுடியவில்லை
பெண்ணாய்ப் பிறந்தது?
சுத்தி சுத்தி பேசுவார்கள்
செயலில்
கத்தி எடுப்பார்கள்
வார்த்தை கொண்டு!
வெட்டி வெட்டி
அறுத்துப் போடுவர் ஆற்றல்களை!
ஆண்வாதம் பேசி
அடுப்படியில் இருந்தால்
போதும் என்பர் எம்மவர்!
பிடிக்கவில்லை என்றால்
திமிர் பிடித்தவள்
பட்டம் சூட்டுவதில்
மேலோங்கி நிற்கும் சமூகம்!
சுத்தமாய் சுதந்திரம் இல்லை
சத்தமாய் பேசினால்
வாயாடி
பெயர் சூட்டு விழாவிற்கு
நம்மவர் தான் முதலிடம்!
பாரதி தேடிய புதுமைப்பெண்
மலர்ந்தும் மலராத
பூவாய் நிற்கிறாள்
அழுக்கான சமூகத்தில்!



கவிஞர் திருமதி. ஜூவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

இன்னா இழைத்த தென்முகன்
இல்லாமை இல்லம் சூழ
இருப்பை கரைய இரைப்பை
வெம்பிய பொழுதுகள்.
தீது வீழ்ந்து நன்மை எழும்
நாள் எந்நாளோ.




கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# மெழுகுவர்த்தி

இரவின் முகத்தில்
வெளிச்சத்தின் முகவரி

தீக்குச்சியின் தீண்டலில்
உயிர் துறக்கும்

மெழுகுவர்த்தி வெளிச்சத்தின்
நிழலாய் வீடுகளில்

தேவாலாயங்களில் இறைவனின்
முன்னே அன்பின்

வெண்ணிற தேவதைகளாய்
மெழுகுவர்த்தியின் அடையாளம்

தனது உடல்
முழுவதும் அக்னியால்


அரவணைக்கபட்டாலும் இருளைத்
துரத்தும் வெளிச்சமாய்

நிற்கும் மெழுகுவர்த்தியின்
கண்ணீர் துளிகள்
என்றும் ஊமையாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

அதிகாரம் : 131



என்நெஞ்சே அவனை
நீ தழுவாதிரு.
அவனடையும் வேதனையை
கண்டுநாம் மகிழலாமே.

உப்புபோல் ஊடலும்
வாழ்க்கையில் சுவாரசியமே.
தப்பித்தவறியும் அதிகரிக்காமல்
அளவோடிருத்தல் அவசியமே.

ஊடல் கொண்டாலும்
உடனே அணைத்திடாவிடில்.
வாடல்கொண்ட தலைவிக்கு
வருத்தம் மேலோங்குமே.

சண்டையிட்ட காதலர்கள்
சட்டென்று சேராதிருத்தல்.
துவண்டகொடியை அடியிலிருந்து
பிடுங்கியெறிதல் போலாகுமே.

நற்குணமுடை காதலனுக்கு
அழகெதெனில் அவன்.
பொற்குணமுடை காதலியிடம்
ஊடுதலின் சிறப்பாமே.

பிணக்கும் ஊடலுமில்லா
காமம் காதலர்க்கு.
நனிகனிந்த பழமும்
முற்றாகாயுமாப்போல் பயனற்றதே.

மடலேறிடும் காதலர்க்கு
இன்பமது நீட்டிக்குமோவென்ற.
ஏக்கமிருந்திடின் அஃதே
துன்பம் உண்டாக்குமே.

தலைவன் அருகில்லா
தருணமதில் தலைவி.
தன்னிலே துன்புற்றிடின்
ஒரு பயனுமில்லையே.

நிழலில் தேங்கிய
நன்னீரே இனிக்குமாப்போல்.
பிணக்கும் அன்புள்ளோரிடம்
தோன்றிடினே இன்பந்தருமாமே.

சண்டையிட்டு விட்டுச்சென்ற
என்னவனை எண்ணி.
நான்வருந்த காரணமே
அவனிடத்துகொண்ட ஆசைதாமே!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# பொங்கல் வாழ்த்து

உழவருக்கும் கால்நடைகளுக்கும்
வந்திடும் விழா அதுவே நம் பொங்கல் விழா

புது வருடந்தனிலே புதுத்துணி இட்டு
புதுப்பானையில் புது அரிசியிலே

புன்னகையோடே புத்தடுப்பில்
பொங்கல் வைத்து சூரியனுக்கும்

கால்நடைகளுக்கும் ஒருங்கே படைத்து
கரும்புகளையும் உடன் வைத்து



தைத்திருநாளையும் மாட்டுப் பொங்கலையும்
சிறப்பாய் நடத்திடுவோமே!

உறவுகளையும் சுற்றம்
சூழ்ந்தோரையும் ஒருங்கே இணைத்து
சகோதரத்துவத்தை உறுதி செய்து

பெரியோரின் ஆசியை ஆசையாய் வாங்கி
காணும் பொங்கலையும்
சுற்றம் சூழ கொண்டாடி மகிழ்ந்திடுவோமே!

தை பிறந்தால் வழி பிறக்கும்
அனைவருக்கும் தைத்திருநாள் நல்வாழ்த்துகள்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# மயக்கும் விழிகள்

வெள்ளி ஓடையில்
தண்ணென்று மிதக்கும்
நீலக் கண்கள்!
மயக்கும் உன் ஓர விழிப்
பார்வையில் தண்டனிட்டுக்
கிடக்குதென் நெஞ்சம்!
வானின் நீலம் கொண்டதோ
உன் விழிகள்?
கடலின் ஆழம் கொண்டதோ?
பார்வையால் சாமரம் வீசி
இதயம் கவர்ந்தவளே!
காத்திருக்கிறேனடி!
உன் காதலுக்காக!
விரைந்து வந்து
கடைந்தேற்றுவாய்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# புதிய ஆரம்பம்

காலம் மாறினாலும்
காதல் மாறாது
வானம் சிவந்தாலும்
வானவிலுக்கு நிகராகது
சூரியன் நிலா நின்றாலும்
பூமி நிற்காது
மழை குளிர் வெயில்
என மாறி வந்தாலும்
என்றும் மறவாது
என் முயற்சி
இறந்தகாலத்தை மறந்து
நிகழ்காலத்தை எண்ணி
எதிர்காலத்தை நோக்கி
பயணிக்க விரும்புகிறேன்
புதியதோர் உதயம் காண
ஆவலுடன் காத்திருக்கிறேன்.



கவிஞர் மா. மோனிஷா

# மண்ணால் புதையூண்ட மனித யுகம்



நாங்கள்தான்
பேசுவது கேட்கிறதா?
மலை அடிவாரம் அது
யாசிக்க இங்கு எவருமில்லை!
கொழுந்தோ எமது தொழில்
ஒரு வேளை உணவு கூட
அடிமைத்தனமான வாழ்க்கை
இருந்தும் இறவாது இயற்கைதனில்
பிரியாது பிணைந்தே இருந்தோம்.

சற்றும் எதிர்பார்க்காத நிலையது
இதமான புயல் என்றுதான்
நினைத்திருந்தோம்
மண்ணுக்கு இறையாகி போகும். நாள்
என்று மறந்து.

ஐயோ! இறைவா!
கைதூக்கி விட நீர் இருப்பீர் என்று நம்பினோம்.
நம்பிய தருணமே கை விட்டதேனோ!
வலிக்கிறதே.. வலிக்கிறதே..


ஆசைக்காக பெற்ற குழந்தை
அசைந்து நீரோடையிலே
தாயென்ற அழு குரலும்
தடம்புரல்கிறதே தரணியதிலே
தோளோடு சுமந்தவரை
விழிகளும் காணத்துடிக்கிறதே

மார்போடு சுமந்தவளை
மனம் தேடியழைகிறதே.
சுற்றமும் எம்மோடு மண்சுமை தூக்கி நிற்க
மூச்சிழந்து வீழ்ந்தோம்
புதையூண்ட இம் மண்ணதிலே.

கவிஞர் சு. தமிழ்ச்செல்வன், தாளம்குடா (இலங்கை)

# நின் நேசம்

காலைப்பனி
கோப்பைத்தேநீர்
கதகதப்பில்.
நின் நேசம்
என் நினைவில்!



கவிஞர் மருதூ ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (கிழக்கிலங்கை)

வெறுப்பையும்
சுயநலத்தையும்
நீக்கினாலே
சமுதாயம் செழிக்கும்.

முதலில் மற்றவர் மேல் வெறுப்பு
பின் நம் மேல் வெறுப்பையும்
சுயநலத்தையும்
நீக்கினாலே சமுதாயம் செழிக்கும்.

சுயநலம் மயக்கும்
அம்மயக்கத்திலிருந்து
வெளிப்படுதலே

சமூகம் சமுதாயம் யார்?
நீயும் நானும் சேர்ந்ததுதானே
இதிலே நாம் மனிதத்திலிருந்து
புனிதத்திற்கு கடந்தால்
நாம்தானே இவ்வுலகைக் காப்பவர்கள்.

காண்பவரெல்லாம் ஆண்டவரானால்
இங்கு தீமைகளில்லா
மாண்புகள் தானே.

இன்பம் பயக்கும்
செயல் ஒன்று
எல்லோருக்கும்
அலைவரிசையில்
நன்மையெனில்
உலகில் தீமைகளும்
அதைநிகழ்த்தும்
தீயோரும் பூமிப் பந்தில்
இல்லையே.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# எறும்பாய் கரும்பாய் இரும்பாய்



முடியுமா என்று முக்காலமும் ஏங்காதே
காரியம் முடியாமல் தூங்காதே.
காரியம் முடியாமல் வாழ்ந்தால்
உனை சுமக்கும் பூமி தாங்காதே.

நதிமீது நடை போட
நழுவாத நம்பிக்கை வேண்டும்.
விதியை எடை போட
விடா முயற்சி என்ற மதி வேண்டும்.

எறும்பாய் இரு சுறுசுறுப்பில்
கரும்பாய் இரு வார்த்தையில்
இரும்பாய் இரு தளராத மன உறுதியில்
யாரும் மதியாத துரும்பாய் இராதே.

பொய்யை வெல்ல வல்லினமாகு
மெய்யை சொல்ல மெல்லினமாகு
நாளைய உலகம் போற்ற நல்லினம் ஆகு

உயரம் என்பது உயரத்தில் இல்லை.
அயராத உழைப்பில் உள்ளது
இயலாமையில் நீ
இளங்கலை பட்டமா பெற்றுள்ளாய்?
முடங்கிக்கிடப்பதில்
நீ முதுகலைப்பட்டமா பெற்றுள்ளாய்?
உனக்குத் தெரியுமா ஒரு உண்மை.
தெரிந்தால்அடைவாய் நன்மை.

விளம்பரத்திற்கு ஆசைப்படாமல் விரும்பியே
தீசுமந்து வெளிச்சம் மெழுகின் தியாகம்தான் வாழ்க்கை.
பகிர்ந்துண்ணும் பாடத்தை பாருக்கு சொல்லும் காகங்கள்.
கொடுப்பதால் அவைகள் கொள்வதில்லை சோகங்கள்.
கரைகளை வந்து தொட்டு விட்டு போகும்
அலைகள் நமக்கு சொல்லும் பாடமே விடா முயற்சிதான்.

கதிரவனின் கண் மலர்தல் என்பது விடியலின் விதை
அன்றைய நாளுக்கு சொல்லும் சுறுசுறுப்பின் கதை
உழைப்பு என்பது முத்துக்குளித்தாலும் கிடைக்காத முத்து
முன்னேறியவர்கள் தலைமுறைகட்கு பரிசாய் தரும் சொத்து.

கவிஞர் முனியாண்டி, திருவில்லிபுத்தூர்

# காதல் நாயகியே



அகம் மகிழும்
அன்பின் பார்வை
குவிந்த அதரங்களில்
புன்னகையின் கீற்றே

குறுநகைப் பூத்திட
உள்ளத்தில் ஆனந்தமே
குறும்பானப் பார்வையில்
குமுதம் மலர்ந்ததே

குறுகுறுப்பு மனதில்
இனிமையாய் தவழ்கிறதே
குற்றாலச் சாரலாய்
நினைவுகள் தொடர்ந்திடுதே

குவளைப்பூவின் வாசம்
மேனியெங்கும் வீசுகிறதே
குங்குமச் சிவப்பாய்
முகமும் மாறியதே

குமரியின் நேசத்திலே
இதயமும் ஈர்ப்பானதே
குறையொன்றும் இல்லை
உந்தன் காதலிலே

குதித்து எழுந்தேன்
பாவையின் வருகையிலே
கும்மாளமிடுதே பருவத்தின்
வாசலில் வந்தே

அகம் மகிழும்
அன்பின் பார்வையே
அனுதினமும் நினைக்கிறேன்
ஒருபொழுதும் மறவாமலே

அல்லிமலரே துள்ளியே
வாராய் என்னருகிலே
அந்திசாயும் நேரத்திலே
ஆசையது துளிர்க்கிறதே

காதல் நாயகியே
ஆதரித்திடு என்னையே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# நடுவு நிலைமை



1. வேண்டியவர் வேண்டாதவர் பாகுபாடின்றி முறை தவறாமலே
யாண்டும் நடத்தலால் நடுவுநிலைமை என்னும் அறமே வருமே

2. நடுவுநிலைமையை உடையவரின் செல்வம் என்றும்
அழிவுநிலை அடையாமல் சந்ததிகளைச் சேரும் நன்றாய்

3. நன்மையைத் தரும் என்றாலும் நடுநிலை தவறிப் பெறும் செல்வம்
தன்மையை ஆராய்ந்து கைவிடுக இன்றே

4. நடுவுநிலை உற்றவரா? வழுநிலை பெற்றவரா? என்று
கடுகளவும் குறைவின்றி அவர் பெற்ற புகழும் இகழும் வழிமொழியும்

5. அயர்வின்றி நடுநிலை தவறாது இருத்தல் அறிவால் நிறைந்திருத்தல் என்றிருப்பர் சான்றோரே
உயர்வும் தாழ்வும் வினைகளால் வரும் என்பர் ஆன்றோரே

6. நடுவுநிலை தவறி முறையற்றதை செய்வோரே சிந்தையிடுக
கெடுநினைவோடு கேடு தரும் பாதையில் செல்கிறோம் என்றே

7. நடுவுநிலை தவறாமல் வாழ்ந்தான் ஒருவன் தாழ்ந்தாலும்
படிநிலை குறைந்து விழுந்தானென எண்ணாரே உயர்ந்தோரே

8. இணையாக நின்று பின்பே பொருளெடை காட்டிடும் துலாக் கோலைப் போலே
ஈடிணையற்ற நடுவுநிலை தவறாதவர் என்ற பெயரோடு உலாபோதலே சாலச் சிறப்பு

9. நடுவுநிலை என்பதே இருந்தாலே சொற்குற்றம் நேராதே
நடுவுநிலை இருந்தாலே சொற்கள் எல்லை மீறாதே

10. பிறர் பொருளையும் தன் பொருளாய் பாதுகாத்து வணிகம் செய்வோரிடம்
அறநெறி தவறாமல் செல்வம் செழித்து வளருமே

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# நீயென் வானவில்



முழுமையாக எழுதி முடிக்கப்படாமலே
அவசரத்தில் அச்சுக்கு சென்று
திரும்பி வந்த புத்தகம் நான்

விழி நிறைய கண்ணீரோடு
தொண்டை நனைப்பதற்கு
துளி நீரைத்
தேடி அலையும் வாழ்வெனது

இருந்தும்

கட்டுத்தரையற்ற காளைக்கு
உன் முந்தானை நெருப்பில்
முகந்துடைக்கும் பேராசை

மௌனமே மொழியாய்
மார்கழிப் பனியாய்
நீ இமை திறந்ததும்
என் கைக்குள் சிறைபட்டது வானம்

வெகுகாலமாய்த் தீண்டாமலே
கடந்து காததூரம்
ஓடிக்கொண்டிருந்த நதி சங்கமித்தது

எதன் பொருட்டும்
துளிகூட ஒட்டிக் கொள்ளாமல்
புறக்கணித்துக்கிடந்த சுவர் முழுவதும்
பேதமற்று பூசிக்கொள்கிறது
வானவில் தன்னிறத்தை



தள்ளிச் செல்வதே
முழுநேர வேலையாக வைத்திருந்த
பூங்காற்று மோதி
உடைகின்றது என் கனவு


சுவாசிப்பதே தெரியாமல்
இருளின் கொடியேறிய
என் இதயக் கூட்டின் மீது
இளமயில் உன் நடனத்தால்
கார்காலமழை என்னுள் கவிழ்ந்து விட்டது

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# கடிதம் மற்றும் தொலைபேசி

அன்று
தொலை தூரம் உறவுகளை
தொடர்பு கொண்ட கடிதங்கள்
தொடர்ந்து வந்த நேசங்கள்.

இன்று
தொலைபேசி வந்தது
தொடர்புகொள்ள நேரமில்லை
தொல்லை என்றானது உறவுகள்.






கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்



அகர முதல

"தைப்பொங்கல் வந்தது
பொங்கலோ பொங்கல்!
சூரியனுக்கு நன்றி சொல்லி
விழா கொண்டாடுவோம்
கரும்பு, நெல், பழம்
படைத்து பொங்கலிடுவோம்
மகிழ்ச்சி, செழிப்பு, நலம்
எல்லாம் வந்து சேரட்டும்!



"வயலில் விளைந்த நெல்லை
வணங்கி பொங்கலிடுவோம்
கால்நடை குளிர பால் ஊற்றி
கரும்பு தின்று மகிழ்வோம்
புது மண் பானையில்
பொங்கல் சமைப்போம்
நன்றி சொல்லி சூரியனுக்கு
அருவி போல் பொங்கட்டும்
மஞ்சள், கரும்பு, தென்னை

மகிழ்ச்சி தரட்டும்
வீட்டில் வளம் பெருகட்டும்
எல்லாருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

கவிஞர் ஏ எம் முர்ஷிதா, கண்டி (இலங்கை)

# உன் வெட்கம்

நீ என்னை பார்த்து
வெட்கப்பட்டதன்
அழகை கண்டு
என் வியர்வைக்கும்
வியர்த்து விட்டது



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

பிழைகளில்தான் எத்தனை எத்தனைப் பிழைகளவ்
பிழைகளில் காட்சிப்பிழையென் றொருபிழையும் உண்டே!
பிழையில்பெரும்பிழை காட்சிப்பிழையாம் அதனைத் திருமந்திரம்
பாடிய திருமூலரும் சிறப்பாய்ப் பாடினரே!



பார்க்கின்ற ஒருபொருள் பார்ப்போருக்கெல் லாமொன்றாகா;
பார்ப்பவர் பார்வைக்கு, அவர்சிந்தனைக்கு ஏற்றபடி
பலவிதமாய்க் காட்சி தந்திடுமென்பதை அறிந்திடவேண்டும்!
மரமொன்றில் செதுக்கப்பட்ட யானைச் சிற்பம்
மரமாய்த் தெரிவதோ யானையாய்த் தெரிவதோ
மனிதர் ஒவ்வொருவரின் பார்வையைப் பொறுத்ததே!

மரத்தைக் கண்டார் மரத்தையே கண்டார்;
மரத்தில்யானைக் கண்டார்யானை யையேகண்டவர் ஆனார்!
புவியைப் புவியாய்ப் பார்ப்பவனுக்கது என்றும்புவியே!
புவியைப் புவியாயின்றி பூமிநாதனாய்ப் பார்ப்பவர்க்கது
பரம்பொருளாம் பரமசிவனன்றி வேறொன்றிலையே!

வான்புகழ் கொண்ட வள்ளுவமுமதனை உரைத்தது
வாயிலா சீவனோ வேறெப்பொருளோ மனிதனோ
அப்பொருளின் மெய்ப்பொருளையே நாமென்றும்கண் டிடவேண்டுமென!

மாமதுரை நகருக்கு வேறெந்த நகருக்குமிலா
மிகப்பெரும் சிறப்பொன்று தைத்திங்கள் நாளுக்குண்டு;
தமிழர்த்திரு நாளையதுகொண் டாடுவதோடு கல்யானைக்கு,
தர்மிக்கு பொற்கிழி கிடைத்திட அருளியவன்
கரும்பினை அளித்து உண்ணச்செய்த கருணைநாளாய்க்
கண்டுணர்ந்து கொண்டாடி மகிழ்ந்திடும் இந்நாளை!

யானைக்கல் என்றொரு பகுதியை மதுரைமக்கள்
யாவருமறிவ ரங்கதுசிம்மக் கல்லருகே அமைந்திருக்கும்;
சிம்மக்கல்லில் சிம்மத்தின்சிலை நான்கண்டதில்லை என்றாலும்
சிறகடிக்கவைக்கும் தன்னழகாலந் தயானைக்கல்லைக் கண்டிருக்கின்றேன்!
கல்யானைக்கும் கரும்பூட்டியகதை யைமுழுமையாய்ப் படித்திடவிரும்பின்
கடினம்பாரா தவராய்த்திருவிளை யாடற்புராணம் கற்பீராகுக!

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம் - திருமந்திரம்

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# ஜல்லிக்கட்டு

தமிழர்களின் திருநாள் பொங்கல் பண்டிகை
அடுத்து வரும் தமிழர்களின்
வீர விளையாட்டுகளில் முக்கிய பங்கு
ஜல்லிக்கட்டுதானே!

அக்காலத்து காளையை அடக்குபவனுக்கே
பெண் கொடுத்து மணமுடித்து
வைக்கும் வழக்கம் உண் டே !
மிக மிக போராடியே மீட்டு வந்தோம்
இவ்வீரவிளையாட்டை!
ஜீவன்களை துன்புறுத்தும்
செயல் அல்லவே !



வீரத்திற்கும், ஒற்றுமைக்கும்
பறைசாற்றும் ஒரு உன்னத விழா!
தன் உயிரையும் பணயம் வைத்து
கலந்து கொள்ளும் வீரர்கள் பலர் உண்டே !
வெற்றி அடைந்தும் பல பரிசுப் பொருட்களை
அள்ளி செல்கின்றனரே!

பாரம்பரிய மிக்க இவ்விளையாட்டை காண
வெளிநாட்டினரும் கலந்து கொள்கின்றனரே !
பாரத மண்ணின் பெருமையை போற்றுவோம்.

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

வேண்டுதல்கள்
அற்ற மனநிலை
கோவிலை
உண்மையாக
தரிசிக்கிறது



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# பெண்



அமைதியா இருந்தா
அமுக்குணி
அதட்டி பேசினா
அடங்காப் பிடாரி
அரண்டு போனா
அசடு
அசைந்தாடி நடந்தா
அன்ன நடை
அஞ்சி பயந்தா
அப்பிராணி
அதிகாரம் செய்தா
அரக்கி
அயராம உழைச்சா
அடிமை
அலுத்து உட்கார்ந்தா
அதீத சோம்பேறி
அழுது புலம்பினா
அழுமூஞ்சி
அழாமல் இருந்தா
அமுக்கி
அள்ளி சொருகுனா
அல்டாப்பு
அறம் பேசுனா
அதப்பு
அனாதையாக நின்னா
அருவெறுப்பானவ
அவளுக்கு எத்தனை பேரு
அடுத்ததாக வைப்பீங்க
அவ சொல்லா ஆரம்பித்தால்
அதகளம் ஆகிடும்
அடக்கி வாசிங்க
அமைதியா பாருங்கள்
அவங்க அவங்க பொண்ணுகளா
அவர்களை நினைங்க

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# அன்றும் இன்றும் உழவு!



ஆறுகள், ஏரிகளில் நீர்நிறந்த காலம்!
மாரியது பொய்க்காமல் பெய்திட்ட காலம்!
நன்செய் புன்செய் நிலங்கள் பயிராலே
நல்விளைச்சல் தந்து உளமகிழ்ந்த காலம்!
உழவுத் தொழிலே கிராமங்களில் உயிர்த்துடிப்பாய்
தழைத்தோங்கிய காலம்! ஆழ உழுது
தழையுரங்கள், எருவிட்டு நிலத்தை வளமாக்கி
பயிர் விளைத்த காலம்! ஏற்றம், கவலையென
நீர் நிறைந்த நிலைமாறி மின்சார வரவாலே
மாற்றங்கள் விளைந்தனவே! கிணறுகளில் மின்மோட்டார்!
உரங்களில் மாற்றம் உருவானது பின்னாளில்!
செயற்கை உரங்கள், பூச்சிக் கொல்லிகளால்
இயற்கை சீரழிய பெருகின நோய்கள்!
அருகின பல்லுயிர்கள்! பெருகின உவர்நிலங்கள்!
குறைந்தனர் உழவர்கள்! வேறுவேலையில் புலம்பெயர்ந்தனர்!
நாற்றுநட, களையெடுக்க, அறுவடை செய்திட
ஆளில்லா நிலையின்று! இயந்திரங்கள் இப்பணியில்!
நெகிழிப் பயன்பாட்டால் நிலத்தடிநீர் குறைந்திடுதே!
சூழ்நிலை சீர்கேட்டால் பருவநிலை மாற்றங்கள்!
பாழ்வறட்சி, பெருமழை, பெருவெள்ளம் இவற்றாலே
பெருந்துயர்கள்! விளைநிலங்கள் பலவும் வீட்டுமனைகளாய்!
வேறுபணி தேடி விரைகின்றார் இளைஞர்கள்!
உரிய விலையின்றி விளைபொருட்கள் வீணாதல்!
எத்தனையோ இன்னல்கள் !அத்தனையும் தாண்டி
மேதினியின் பசிதீர்க்க உழவுத்தொழில் தொடர்கிறதே!
உழவர்களின் வாழ்வு உயர்ந்தால்தான் உலகுய்யும்!
உழைப்பின் பயனை முழுவதுமாய் பெறும்வகையில்
தழைக்கட்டும் உழவு! தங்கட்டும் மங்கலங்கள்!
பழமையை, பாரம்பரியத்தை, பண்பாட்டைப் பறைசாற்றும்
உழவர்க்கு நன்றியினை உரைத்து வணங்கிடுவோம்!

கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

### அந்த கணத்து நிகழ்வுகள் மட்டுமே

உணவோ
பொருள் சேர்க்கையோ
கேளிக்கையோ சுற்றுலாவோ
உரையாடாலோ சந்திப்போ
உற்று நோக்குதலோ
தனிமையோ

விரும்புகின்ற
கணத்தில் நிகழும் போது
மட்டும்தான்
உச்சபட்ச
உவகை கிடைக்கிறது



****

### அவைகள் போதாது

எல்லாவற்றுக்கும்
கருத்து வேற்றுமை
எதற்கு எடுத்தாலும்
வாக்குவாதம்
மற்றவரிடம் எப்போதும்
குற்றச்சாட்டு

பிறர் பேசினால்
முகச்சுழிப்பு என்று
நீண்டு கொண்டே போகின்ற
பகைமையில்

நேருக்குநேர் பேசாமையோ
பிரிவோ மட்டும் போதாது

சிந்தனையிலும் புத்தியிலும்
அவற்றை
புறந்தள்ளினால் மட்டுமே
நிம்மதியும் பிறவற்றுக்கான
கவனக்குவிப்பும் கிடைக்கும்.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# பொங்கல் பண்டிகை

## கட்டுரை

### முன்னுரை



தமிழர்களின் வீரத்தையும், பண்பாட்டையும் பறைசாற்றும் மிக முக்கியமான விழா பொங்கல் விழா ஆகும். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற பழமொழிக்கு ஏற்ப, அறுவடை முடிந்து உழவர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் திருநாளாக இது அமைகிறது. இயற்கைக்கும், கால்நடைகளுக்கும் நன்றி செலுத்துவதே இப்பண்டிகையின் முக்கிய நோக்கமாகும். பொங்கல் பண்டிகை மொத்தம் நான்கு நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

### 1. போகிப் பண்டிகை:

மார்கழி மாதத்தின் கடைசி நாளில் போகி கொண்டாடப்படுகிறது. "பழையன கழிதலும், புதியன புகுதலும்" என்ற அடிப்படையில், வீட்டில் உள்ள தேவையற்ற பொருட்களை நீக்கி வீட்டைச் சுத்தம் செய்வார்கள். இது மனதின் அழுக்குகளை நீக்குவதையும் குறிக்கிறது.

### 2. தைப்பொங்கல்:

தை மாதத்தின் முதல் நாள் பொங்கல் பண்டிகை ஆகும். அன்று அதிகாலையில் புதிய பானையில், புதிய அரிசியிட்டு, பால் ஊற்றிப் பொங்கல் வைப்பார்கள். பானையிலிருந்து பால் பொங்கி வரும்போது "பொங்கலோ பொங்கல்!" என்று முழக்கமிடுவது வழக்கம். இது குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிய வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

பிரபுவின் முகம் சிவந்து போயிருந்தது. யாரிடம் போய் முட்டிக்கொள்வது என்று புரியவில்லை.
கண்ணன் இவ்வளவு சின்னபிள்ளைத்தனமாக நடந்து கொள்வான் என்று எதிர் பார்க்கவில்லை. நரேனுக்கும் வசந்த்திற்கும் தன் மேல் சந்தேகம் வந்து விட்டது புரிந்தது.

அவர்கள் சித்தரின் கல்லறையிலிருந்து அந்த ஆல காலச் செடியை பிடுங்கிக் கொண்டு போய் விட்டால், பின்னர் மந்திரியின் முகத்தில் விழிக்க முடியாது. ஏற்கனெவே இரண்டு மூன்று முறை பணம் தந்ததைச் சொல்லிக்காட்டி கத்திவிட்டார். இதிலே, நாளைக்கே, களக்காட்டுக்கு வரப்போகிறாராம். வந்தால் அவ்வளவு தான். என்ன செய்யலாம்? ஒன்றுமே புரியவில்லை.ஒழுங்காக, மந்திரியிடம் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடலாமா? ச்சே! பெரிய பணம். அவ்வளவு எளிதில் விட்டுக்கொடுத்து விட முடியாது.
சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழலாமென்று சொல்வார்கள். ஆனால் அதன் பிறகு, நரேனுக்கும் வசந்த்திற்கும் நம்மேலிருந்த மதிப்பு அதலப்பாதாளத்திற்குப் போய் விடும். இவ்வளவும் செய்து விட்டு, முன்னறையில் நாற்காலியை இழுத்துப்போட்டு சாவகாசமாக மொபைலில் விளையாடிக்கொண்டிருந்த கண்ணனை நினைத்து அழுவதா, சிரிப்பதா என்று புரியவில்லை.

"கண்ணன் இங்கே வாப்பா?" என்றார். அவனும் மொபைலை மூடிவிட்டு "எஸ் சார்" என்றான்

"நீ காட்டுக்குள்ளேயிருந்து வெளியே வரும்போது, உண்மையிலே வசந்த், அங்கேயிருந்து போய்விட்டானா?"

"ஆமா சார். நானும் எவ்வளவோ தேடிப்பார்த்தேன்.அவனைக் காணாததினாலே, அவன் போய்விட்டான் என்று நினைச்சிட்டு நானும் திரும்ப வந்து விட்டேன். ஆங்.. சார்.. ஆட்டோகாரனுக்கு அறு நூறு ரூபாய் என் பாக்கெட்டிலிருந்து கொடுத்தேன் சார்" என்றான்

### 3. மாட்டுப் பொங்கல்:

உழவர்களுக்கு உற்ற நண்பனாக விளங்கும் கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் நாள் இது. மாடுகளைக் குளிப்பாட்டி, கொம்புகளுக்கு வர்ணம் பூசி, அவற்றுக்குப் பொங்கல் ஊட்டி மகிழ்வார்கள். சில ஊர்களில் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு இந்நாளில் நடைபெறும்.

### 4. காணும் பொங்கல்:

உறவினர்களையும், நண்பர்களையும் நேரில் சென்று சந்தித்து வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்ளும் நாள் இது. பெரியவர்களிடம் ஆசி பெறுவதும், குடும்பத்துடன் சுற்றுலாத் தலங்களுக்குச் சென்று மகிழ்வதும் இந்நாளின் சிறப்பம்சமாகும்.

### பண்டிகையின் முக்கியத்துவம்:



நன்றி உணர்வு: நமக்கு உணவளிக்கும் இயற்கைக்கும் (சூரியன்), உழைக்கும் மாடுகளுக்கும் நன்றி சொல்லும் உன்னத விழா. சமத்துவம்: சாதி, மத வேறுபாடின்றி அனைத்துத் தமிழர்களும் கொண்டாடும் 'தமிழர் திருநாள்' இது. பண்பாடு: தமிழர்களின் பாரம்பரிய உடைகள், உணவுகள் மற்றும் கலைகளை இளைய தலைமுறைக்குக் கொண்டு செல்லும் பாலமாக இது விளங்குகிறது.

### ஜல்லிக்கட்டு: தமிழர்களின் வீர விளையாட்டு:

ஜல்லிக்கட்டு என்பது தமிழர்களின் வீரத்திற்கும், பாரம்பரியத்திற்கும் சான்றாக விளங்கும் ஒரு வீர விளையாட்டு ஆகும். இது பெரும்பாலும் மாட்டுப்பொங்கல் அன்று கிராமங்களில் மிக உற்சாகமாகக் கொண்டாடப்படுகிறது.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

கோபம் தலைக்கேற, "இந்தா.. எவ்வளவு? எடுத்துக்கோ" என்று கத்தினார். "ஏன் சார் கத்தறீங்க.. அவ்வளவு முக்கிய செடியா அது?..." மெதுவாகக் கேட்டான்

"முட்டாள், முட்டாள் கோட்டை விட்டுட்டு வந்துட்டு எங்கிட்டே கேள்வி கேட்டுக்கிட்டே இருக்கே. அந்த வசந்த் அந்தச் செடியை சித்தர் புதைத்த இடத்திலிருந்து பிடுங்கிட்டுப் போயிருந்தா, அப்புறம் குடி முழுகிப்போய் விடுமடா. இப்ப என்னச் செய்றது?" தலையைப் பிடித்துக்கொண்டார் பிரபு. "சார்.பேசாமல் இன்னொரு முறை நாம் அவங்களை ஆஸ்பத்திரியிலே போய் பாத்தா... " என்று சொல்லி முடிப்பதற்குள்," பிரமாதம். கண்ணா என் வயிற்றிலே பாலை வார்த்தாய். அவன் திரும்பி வருவதற்குள் நாம் ஆஸ்பத்திரி வாசலிலேயே அவனைப் பிடித்து விடலாம். சரி உடனே காரை எடு" வேகமாக கீழே இறங்கினார் பிரபு. கண்ணன் வேகமாக காரை ஓட்ட, பிரபுவின் அலை பேசி ஒலிக்க அவர் எடுத்துப் பேசினார்.

"என்ன பிரபு... நாளைக்குள்ளே அந்த ஆல கால‌ச் செடி நம்ம கையிலே கெடச்சிருமில்ல.." என்றார் எதிர் முனையில் அமைச்சர். முதலில் மவுனமாக இருந்த பிரபு, திரும்பவும் அமைச்சர் கத்த ஆரம்பிக்க, " சார். உங்களை விட நான் அதிக டென்சனிலே இருக்கேன். நீங்க வர்றதுக்குள்ளே எப்படியாவது வானத்தை வளைச்சாவது கொடிய கொண்டு வந்துருவேன் சார்" என்றார். "என்ன செய்வியோ பிரபு.. நான் என் ப்ரோகிராம் எல்லாம் கேன்சல் பண்ணிட்டு நாளைக்கு களக்காட்டுக்கு வர்றேன். வந்ததும் என் கைக்கு அந்தச் செடி வந்தாகணும். அந்தக் கம்பெனிக்காரன் சும்மா கெடந்து கூவிக்கிட்டே கெடக்காம்பா... என்ன செய்யிறது... கைய நீட்டி பணத்தை வாங்கியாச்சி.. நீயும் என்னவோ கடையிலே வாங்கி வச்சிருக்கிறத மாதிரி வந்த உடனே எடுத்து தர்றேன்னு பணத்தை வாங்கிட்டு வநதாய். ம்... என்ன செய்வியோ ஏது செய்வியோ எனக்குத் தெரியாது. நான் நாளைக்கு களக்காட்டுக்கு வந்ததும் என் கைக்கு அந்தச் செடி வந்தாகணும். ஞாபகம் வச்சிக்க..." என்றார் கோபமாக.

"சரி சார்" என்று ஈனஸ்வரத்தில் பதிலளித்து விட்டு, கண்ணனை முறைத்துப் பார்த்தார் பிரபு.

## கட்டுரை

**வரலாற்றுப் பின்னணி:**

பெயர்க்காரணம்: 'சல்லி' (நாணயங்கள்) மற்றும் 'கட்டு' (முடிப்பு) ஆகிய சொற்களே ஜல்லிக்கட்டு என மருவியது. அக்காலத்தில் காளையின் கொம்புகளில் நாணயங்கள் அடங்கிய துணிப்பையை கட்டி விடுவார்கள். அதனை எடுக்கும் வீரருக்கே அந்தப் பரிசு சேரும். சங்க இலக்கியம்: இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கலித்தொகை போன்ற சங்க இலக்கியங்களில் 'ஏறுதழுவுதல்' என்ற பெயரில் இந்த விளையாட்டு போற்றப்பட்டுள்ளது.

**வாடிவாசல்:**

காளைகள் ஒவ்வொன்றாக ஒரு குறுகிய வாசல் வழியாக மைதானத்திற்குள் விடப்படும். இதற்கு 'வாடிவாசல்' என்று பெயர். காளை வெளிவரும்போது, அதன் திமிலைப் பிடித்து ஒரு குறிப்பிட்ட தூரம் அல்லது குறிப்பிட்ட நேரம் வரை தழுவிச் செல்லும் வீரர் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார். எந்த ஒரு வீரராலும் அடக்க முடியாத காளை 'வெற்றிக் காளை' என்று அழைக்கப்படும். பரிசுகள் வழங்கப்படும்.

**ஜல்லிக்கட்டின் முக்கியத்துவம்**

சிறந்த மற்றும் வலிமையான நாட்டு மாட்டு இனங்களைப் பாதுகாப்பதில் ஜல்லிக்கட்டு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி சாதி, மத பேதமின்றி இத்திருவிழாவை நடத்துவர். தமிழகத்தில் அலங்காநல்லூர், பாலமேடு மற்றும் அவனியாபுரம் ஆகிய ஊர்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு உலகப் புகழ்பெற்றது.

**முடிவுரை**

உழவுத் தொழிலைப் போற்றும் பொங்கல் பண்டிகை, நம் பண்பாட்டின் அடையாளம். இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், உழவர்களின் உழைப்பை மதிக்கவும் நாம் இந்நாளில் உறுதி ஏற்க வேண்டும். பொங்கலைப் போலவே நம் அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சி என்றும் பொங்கட்டும்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

நாளை
# நமதே

பிறரை பாராட்ட
ஆர்வம் இருக்கும் வரை
நீ பாராட்டக் கூடிய
இடத்திற்கு சென்று
கொண்டே இருப்பாய்

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com